


நாடக கலை விழாவை அமைச்சர் சந்திர பிரியங்கா தொடங்கி வைத்து பேசியபோது எடுத்த படம். அருகில் வைத்தியநாதன் எம்.எல்.ஏ. மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

### கலை பண்பாட்டு துறை சார்பில்

# மொழியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நாடக விழா

## அமைச்சர் சந்திரபிரியங்கா தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, பிப்.1-

கலை பண்பாட்டு துறை சார்பில் மொழியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்த நாடக விழாவை அமைச்சர் சந்திர பிரியங்கா தொடங்கி வைத்தார்.

### நாடக விழா

புதுச்சேரி அரசு கலை பண்பாட்டு துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம், புதுச்சேரி பல்கலைக்கழக நிகழ் கலைத்துறை சார்பில் லாஸ்பேட்டையில் உள்ள மொழியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிகழ்நிலை (ஆன்லைன்) நாடக விழா ஒரு வாரம் நடைபெற உள்ளது.

இதன் தொடக்க விழா நேற்று காலை நடந்தது. விழாவிற்கு தொகுதி எம்.எல்.ஏ. வைத்தியநாதன் தலைமை தாங்கினார். விழாவில் அமைச்சர் சந்திர பிரியங்கா கலந்துகொண்டு நாடகவிழாவினை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

புதுச்சேரி முதல்-அமைச்சர் ரங்கசாமி எல்லா மக்களுக்கும் எல்லாவித நலத்திட்ட உதவிகளும் கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். நாடகம் ஒரு கலை. இது அழியவே கூடாது. சுதந்திர போராட்ட காலத்தில் போராட வேண்டும் என்ற உணர்வை தூண்டியது நாடகம் தான். சிறப்புமிக்க போராளிகள் நாடக கலைஞர்கள். இவர்கள் தங்கள் திறமைகளை மேலும் வளர்த்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### 35 நாடகங்கள்

விழாவில் கலை பண்பாட்டு துறை செயலாளர் நெடுஞ்செழியன், பல்கலைக்கழக நிகழ் கலைப்பள்ளி டீன் ஸ்ரீதரன், கலை பண்பாட்டு துறை இயக்குனர் சிவராசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

விழாவில் தினந்தோறும் 5 நாடகங்கள் வீதம் வருகிற 6-ந் தேதி வரை 7 நாட்கள் மொத்தம் 35 நாடகங்கள் நடைபெறுகிறது.

கொரோனா தொற்று காலத்தில் வாழ்வாதாரம் இன்றி நலிந்த நிலையில் உள்ள நாடக கலைக்குழுவுக்கு உதவிடும் வகையில் ஒவ்வொரு குழுவுக்கும் தலா ரூ.30 ஆயிரம் வீதம் ரூ.10 லட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. மத்திய அரசின் கலாசார அமைச்சகத்தின் முகநூல் (பேஸ்புக்) பக்கத்தில் இந்த நாடகங்கள் பதிவேற்றம் செய்யப்படும்.